## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 77/2024** **Date:27.03.2026.**

**(PW1)- Vijison Raj**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 221/19 ஆகும். தாவா சொத்தில் உள்ள வீட்டின் பழைய கதவு எண் மற்றும் தற்போது கட்டப்பட்டுள்ள புதிய வீட்டின் கதவு எண் என்ன என்றால் பழைய கதவு எண் 9/115, புதிய கதவு எண் 9/115A ஆகும். ஆனால் வாதி தனது பிராதில் புதிய கதவு எண் 9/115B என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் மாடியில் உள்ள வீட்டின் கதவு எண் 9/115 B ஆகும், கிழ் தளத்தில் உள்ள வீட்டின் கதவு எண் 9/115A ஆகும். நான் தாவா வீட்டிற்கான வரைபட அனுமதியை என்னிடம் வைத்திருந்தும் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 வரைபட அனுமதி எத்தனை வருடங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 5 வருடகாலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி அனுமதியானது 25.11.2024 ல் காலவாதியாகிவிடும் என்றால் சரியல்ல. மேற்படி காலத்திற்கு பின்பு நான் கட்டிடம் தொடர்ந்து கட்ட விரும்பினால் மேற்படி வா.சா.ஆ. 6 ஆவணத்தின் 11 வது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளது போல் மீண்டும் உரிமம் பெற்றுதான் கட்ட முடியும் என்றால் சரியல்ல, அது தேவையில்லை. எனவே உரிமம் இல்லாமல் கட்டிய கட்டிடத்திற்கு செலுத்திய வா.சா.ஆ.7 ரசீது செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

3. 2 ம் பிரதிவாதி கட்டிட ஒப்பந்ததாரராக பணியாற்றுவதாக குறிப்பிட்டுள்ளேன் அவரது பெயர் என்ன என்றால் வின்செண்ட் ஜார்ஜ் ஆகும். 08.02.2019 ல் வாதியும் பிரதிவாதியும் ஒப்பந்தத்தின் விபரங்கள் என்ன என்றால் 2741 ஆகும், தற்போது சாட்சி கையில் எழுதி வைத்திருப்பதை பார்த்து 4196 சதுர அடி சொத்தை ஒரு சதுர அடிக்கு 1525 ரூபாய்க்கு கட்டி தருவதாக குறிப்பிட்டார். தோரயாமாக மேற்படி சொத்தை கட்டி முடிப்பதற்கு எவ்வளவு தொகை ஆகும் என்றால் ரூ. 6555484/- ஆகும். எனது மனைவி தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி அடமான பத்திர ஆவண எண் மற்றும் அதன் கடன் தொகை எவ்வளவு என்றால் ஆவண எண் தெரியாது தொகை ரூ. 4100000/- ஆகும்.

4. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் ரூ. 3322848 க்கு புதுப்பித்தல் ஒப்பந்தம் செய்துக்கொண்டதாக தெரிவித்துள்ளேன் மேற்படி தொகையானது நான் மேலே குறிப்பிட்டுள்ள ரூ. 6555484/- ஒப்பந்த தொகையில் நான் திரும்ப செலுத்தியதாக

குறிப்பிடப்படும் ரூ. 3230000 தொகையை கழித்து போக வரும் தொகைதான் மேற்படி புதுப்பித்தல் ஒப்பந்ததில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் வாதியும் வழக்கின் முழு விபரங்களை வழக்கில் தெரிவிக்கவில்லையென்றால் சரியல்ல. நான் 27.04.2022 தேதியில் பிரதிவாதிக்கு ரூ. 100000/- குறிப்பிட்டுள்ளதை காட்டுவதற்கு எதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. நான் பிரதிவாதிக்கு அவர் செய்த வேலைக்கான தொகையை திரும்ப செலுத்தவேண்டி உள்ளது என்றாலும் அதை திரும்ப செலுத்த கூடாது என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான புதுப்பித்தல் ஒப்பந்தம் எப்போது முடிவுபெறுகிறது என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 26.08.2022 தேதியிட்ட எந்த வித பதில் அறிவிப்பும் பிரதிவாதி வாதிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போது வீட்டை கட்டிமுடித்தேன் என்றால் 09.10.2024 ல் கட்டிமுடித்தேன். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீது 29.03.2023 ல் வீடு கட்டி முடித்துவிட்டதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் ஏற்கனவே வீடு கட்டி முடித்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன், பின்பு எதன் அடிப்படையில் பிரதிவாதி 28.09.2024 ல் அத்துமீறி நுழைந்து எனக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 10 வது மாதம் தான் கட்டிடம் கட்டி முடித்தோம்.

6. பிரதிவாதி மேற்படி தேதியில் அத்துமீறி நுழைந்ததற்கு ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நானோ வாதியே புகார் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்றும் அவருக்கு கொடுக்வேண்டிய பணத்தை திரும்ப கொடுக்ககூடாது என்பதற்காகவும் வாதி பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியத்திற்கும் வாதியின் வழக்கிற்கும் அதிக முரண்பாடுகள் இருப்பதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது மனைவி சாட்சியம் அளித்தால் வழக்கு சம்பந்தமான உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. வாதி தரப்பு பிராதில் சொல்லவிட்ட சங்கதிகளை நிரப்புவதற்காகவே நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் யாரை வைத்து மீதமுள்ள கட்டிட வேலையை முடித்தேன் என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. எனது மனைவி பிரதிவாதியுடன் ஏற்படுத்திகொண்ட ஒப்பந்தகளில் நான் தரப்பினர்

இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகளில் நான் பொய்யான சர்வே எண்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி ஒப்பந்தம் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டதாகும். பிரதிவாதி தயார் செய்திருந்தாலும் அதை வாதி படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல, நான் எனது மனைவி மற்றும் பிரதிவாதி சேர்ந்து எழுதி தயார் செய்த ஒப்பந்தம் எனவே எனது மனைவி படித்துப்பார்க்காமல் கையெழுத்து செய்தார். வாதி கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**